1450

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

பட்ட மேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - **2021/2022**

இறுதிப் பரீட்சை - 2023

**STP8306/ESP2106-கல்வி வழிகாட்டலும் ஆலோசனை நிரலும்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 19.11.2023 நேரம்: மு.ப. 09.30 - மு.ப 12.30

- பகுதி **I** இன் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதாவது மூன்றிற்கும் (03) விடையளிக்குக.

## பகுதி – I

1. வழிகாட்டல் மற்றும் ஆலோசனை கூறல் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை விளக்குக.

2. ஆலோனை கூறலில் முக்கியம் பெறும் ஒழுக்க கோவைகள் (Ethics) **நான்கினைக் (04)** குறிப்பிடுக.

3. உங்கள் பாடசாலையில் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையில் இணைக்கப்பட வேண்டுமென நீங்கள் நினைக்கின்ற **இரண்டு (02)** அம்சங்களைச் சுருக்கமாக ஆராய்க.

4. தொழில் வழிகாட்டல் சேவையின் அடிப்படை மூலங்கள் **நான்கினைக் (04)** குறிப்பிடுக.

5. ஆசிரியர்கள் தங்களின் கற்பித்தல் தொழிலில் வெற்றி அடைவதற்கு வழிகாட்டல் ஆலோசனை பற்றிய அறிவு எவ்வாறு உதவுகின்றது என்பதுடன் தொடர்புபட்ட **மூன்று (03)** விடயங்களை ஆராய்க.

6. ஆக்கிரமிப்பு சார் நடத்தை அத்துடன் சமூக விரோத நடத்தை ஆகிய இரண்டிற்குமிடையிலான வேறுபாட்டை ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான உதாரணங்களை குறிப்பிடுவதனூடாக ஆராய்க.

7. நடைமுறை சமூக சூழலின் அடிப்படையில் இலங்கையில் காணப்படும் இளையோருக்கு வழிகாட்டல், ஆலோசனை சேவை அவசியம் என்பதற்கான காரணங்கள் **ஐந்தினைக் (05)** குறிப்பிடுக.

8. ஆலோசனை கூறலில் ஆலோசனை நாடியின் விருத்தி செயன்முறையில் ஆலோசனை நாடிக்கும் சிகிச்சையளிப்பவருக்கும் இடையிலான இடைத்தொடர்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் இரண்டு சிகிச்சைசார் அணுகுமுறையினை குறிப்பிடுக.

**(5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** "பொருத்தப்பாடு" என்பதை வரையறுக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** பொருத்தப்பாடு அடைய இயலாதிருத்தல் கல்விசார் பிரச்சினையாக எவ்வாறு உள்ளதென்பதை உதாரணங்கள் தந்து விளக்குக.

**(09 புள்ளிகள்)**

**iii.** பொருத்தப்பாடு தொடர்பான விளக்கம், ஆசிரியருக்கு முக்கியம் பெறுவதற்கான காரணங்கள் **மூன்றினைக்** (03) குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

10.

**i.** எலிகின்ஸ்பேர்க் (Ellie Ginsberges) இன் தொழில் தெரிவு தொடர்பான கொள்கையின் படி தொழில் தெரிவு தொடர்பான பிரதான சந்தர்ப்பங்கள் **மூன்றினைப்** (03) பெயரிடுக.

**(08 புள்ளிகள்)**

**ii.** அவ் ஒவ்வொரு சந்தர்ப்பங்களினதும் குறிப்பான பண்புகளை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** தொழில் வழிகாட்டலில் இக்கொள்கையின் முக்கியத்துவத்தினை காட்டும் காரணங்கள் **மூன்றினை** (03) மீளாய்வு செய்க.

**(04 புள்ளிகள்)**

11.

**i.** இலங்கையில் பாடசாலைக்கு புறம்பான முறையில் செயற்படும் வழிகாட்டல் ஆலோசனை சேவைகள் **இரண்டினைப்** (02) பெயரிடுக.

**(02 புள்ளிகள்)**

**ii.** நாட்டின் இன்றைய ஆலோசனை கூறல் சேவைகளுடன் தொடர்புபட்ட வகையில் மேலே குறிப்பிட்ட யாதாயினும் ஒரு வழிகாட்டல் ஆலோசனை சேவையில் வழங்கப்படும் சேவையின் பொருத்தப்பாடு பற்றி சுருக்கமாக ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

**iii.** ஆலோசனை கூறலில் ஒழுக்க கோவை ஒன்றினை பேண வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

12.

**i.** உளப்பகுப்பாய்வு அணுகுமுறை, இருத்தலியல் அணுகுமுறை ஆகியவற்றின் அடிப்படை தத்துவங்களை வேறுபடுத்துக.

**(08 புள்ளிகள்)**

**ii.** இருத்தலியல் அணுகுமுறைகள் மூலம் அனுகூலங்கள் அடையும் ஆலோசனை நாடி வகையினரை கலந்துரையாடுக.

**(06 புள்ளிகள்)**

**iii.** இருத்தலியல் அணுகுமுறையின் பிரதான வரையறைகளை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

13. சமூக கலாசார மற்றும் பொருளாதார அம்சங்கள் உலகில் ஏற்பட்டு வரும் வேகமான மாற்றங்கள் புதிய பிரச்சினைகளை தோற்றுவிக்கித்துள்ளன.

**i.** தகவல் தொழில்நுட்பத்தின் விரைவான மாற்றங்களால் ஏற்பட்டுள்ள **மூன்று** (03) பிரச்சினைகளை உதாரணங்களுடன் விளக்குக.

**(2x3= 06 புள்ளிகள்)**

**ii.** மேற்படி தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட இத்தகைய பிரச்சினைகள் எவ்வாறு பாடசாலை பிள்ளைகளின் பொருத்தப்பாடான ஆளுமை விருத்தியில் தாக்கம் செலுத்துகின்றன என்பதனை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** பாடசாலை ஆசிரியர் ஒருவரினால் மாணவர்களிலிருந்து பொருத்தப்பாடான ஆளுமையை விருத்தி செய்வதற்கு உதவும் பொது மேற்படி பிரச்சினைகளை எவ்வாறு இழிவாக்கி கொள்ள முடியும் என கலந்துரையாடுக.

**(06 புள்ளிகள்)**

14.

**i.** ஆலோசனை செயன்முறையில் தரவு சேகரிக்கும் முறைகளின் நுட்பங்கள் **ஐந்தினைக்** (05) குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

**ii.** உங்கள் பாடசாலையில் நடத்தை பிரச்சினைகளுள்ள பிள்ளைகளுக்கு ஒரு வார காலத்தினுள் அவதானிக்க கூடியதாக, அவதானிப்பு அட்டவணை ஒன்றினை தயாரிக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** ஆசிரியர் என்ற வகையில் உங்களுக்கு மேலே II குறிப்பிட்ட பிள்ளைக்கு எவ்வாறு உதவி செய்யலாம் என்பதைக் குறிப்பிடுக.

**(07 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -